**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.389** **நாள் : 18.11.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், புல்லா அவென்யூ, சென்னை மகளிர் மேல்நிலைப்பள்ளியில், கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ், 187 மாணவிகளுக்கு கண் கண்ணாடிகளை வழங்கினார்.**

இன்று (18.11.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், அண்ணாநகர் மண்டலம், செனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள சென்னை மகளிர் மேல்நிலைப்பள்ளியில், கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ், இந்தியா விஷன் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தின் சார்பில் இப்பள்ளியில் பயிலும் 1150 மாணவிகளுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டு, அதில் 187 மாணவிகளுக்கு கண் கண்ணாடிகளை மாணவியர்களுக்கு வழங்கினார்.

இந்தியா விஷன் இன்ஸ்டிடியூட் நிறுவனமானது, பள்ளி குழந்தைகளைப் பரிசோதித்து, அதில் கண்பார்வை குறைவாக உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு கண் கண்ணாடிகளை வழங்கி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக , செனாய் நகர் புல்லா அவென்யூவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டு, அதில் ஒரு மில்லியனாவது பள்ளிக் குழந்தைக்கான கண் கண்ணாடி உள்பட 187 பள்ளி மாணவிகளுக்கு கண் கண்ணாடிகளை மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்.

பள்ளி குழந்தைகளுக்கு கண் கண்ணாடி வழங்கும், இப்பணியினை சிறப்பாக மேற்கொண்டு வரும் இந்நிறுவனத்தின் சேவையினை மாண்புமிகு மேயர் அவர்கள் பாராட்டினார். பின்னர் இப்பள்ளியில் பயிலும் மாணவிகளுடன் மாண்புமிகு மேயர் அவர்கள் கலந்துரையாடி அவர்கள் நன்கு கல்வி பயின்றிட அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் கல்வி திரு.த.விசுவநாதன், மண்டலக்குழுத் தலைவர் திரு. கூ.பி.ஜெயின், இந்தியா விஷன் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு.வினோத் டேனியல் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

பெருநகர சென்னை மாநகராட்சி.